# மே 5

# புனித லூயிஸ் கிரிஞ்ஞுன் தேமோன்பர்ட்

## *1673 — 1716*

இவர் பிரான்ஸ் நாட்டில் ஊர் ஊராய்ப் போய் மறையுரைகள் நிகழ்த்தி வந்தார். அட்டத்தரித்திரராக வாழ்ந்தார். மாதாவைப் பற்றியும், அவளது செபமாலையை பற்றியும், உருக்கமாக பிரசங்கிப்பார். எளிய நடையில் பேசுவார். இவரது முயற்சியால் ஏராளமான மக்கள் நல்ல கிறிஸ்தவர்களாக வாழத் தொடங்கினார்கள். இவர் மக்களுக்கு பொதுத் தியான மறைஉரைகள் நிகழ்த்துவார். உட்தியானங்கள் நடத்துவார். இவற்றின் இறுதியில் தவ ஊர்வலங்கள் நடைபெறும். மக்கள் அனைவரையும் கடவுளின் மாதாவுக்கு அர்ப்பணம் செய்வார். செபமாலை சபையை நிறுவினார். “மாதா மீது உண்மையான பக்தி” செபமாலையின் இரகசியம் போன்ற பல அரிய நூல்களை எழுதினார். செபமாலையை பக்தியுடனும், பயனுடனும் செபிக்க இவர் ஒரு நல்ல வழி கண்டுபிடித்தார். ஒவ்வொரு பத்துமணி செபத்தின் போதும் “உம்முடைய திருவயிற்றின் கனியாகிய இயேசு” என்ற சொற்களுக்குப் பின் அந்த தேவ இரகசியத்தை அடுத்த சில சொற்களைச் சேர்ப்பதே அந்த வழி.

1. உம்முடைய திருவயிற்றின் கனியாகிய இயேசு, தம்மைத் தாழ்த்தியவர் ஆசீர்வதிக்கப்பட்டவரே.
2. உம்முடைய திருவயிற்றின் கனியாகிய இயேசு அருளப்பரை அர்ச்சிக்கச் சென்றவர் ஆசீர்வதிக்கப்பட்டவரே.
3. உம்முடைய திருவயிற்றின் கனியாகிய இயேசு வசதிகளின்றி பிறந்து வாழ்ந்தவர் ஆசீர்வதிக்கப்பட்டவரே.
4. உம்முடைய திருவயிற்றின் கனியாகிய இயேசு உம்மை மென்மேலும் தூய்மைப்படுத்தியவர் ஆசீர்வதிக்கப்பட்டவரே.
5. உம்முடைய திருவயிற்றின் கனியாகிய இயேசு பிதாவுக்குக் கீழ்ப்படிந்து தேவாலயத்தில் தங்கியவர் ஆசீர்வதிக்கப்பட்டவரே.
6. உம்முடைய திருவயிற்றின் கனியாகிய இயேசு தேவ சித்தத்திற்குப் பணிந்தவர் ஆசீர்வதிக்கப்பட்டவரே.

7. உம்முடைய திருவயிற்றின் கனியாகிய இயேசு எனக்காகத் தம் உடலைத் தண்டித்தவர் ஆசீர்வதிக்கப்பட்டவரே.
8. உம்முடைய திருவயிற்றின் கனியாகிய இயேசு நிந்தை அவமானங்களை சகித்தவர் ஆசீர்வதிக்கப்பட்டவரே.
9. உம்முடைய திருவயிற்றின் கனியாகிய இயேசு எனக்காக சிலுவை சுமந்தவர் ஆசீர்வதிக்கப்பட்டவரே.
10. உம்முடைய திருவயிற்றின் கனியாகிய இயேசு விரோதிகளை மன்னித்து மன்றாடியவர் ஆசீர்வதிக்கப்பட்டவரே.
11. உம்முடைய திருவயிற்றின் கனியாகிய இயேசு உமது விசுவாசம் வெற்றிபெறச் செய்தவர் ஆசீர்வதிக்கப்பட்டவரே.
12. உம்முடைய திருவயிற்றின் கனியாகிய இயேசு உம்மை நம்பிக்கையுடன் காத்திருக்கச் செய்தவர் ஆசீர்வதிக்கப்பட்டவரே.
13. உம்முடைய திருவயிற்றின் கனியாகிய இயேசு பரிசுத்த ஆவியால் அப்போஸ்தலர்களைத் திடப்படுத்தியவர் ஆசீர்வதிக்கப்பட்டவரே.
14. உம்முடைய திருவயிற்றின் கனியாகிய இயேசு உலக பற்றின்றி வாழ்ந்த உம்மை தம்மிடம் அழைத்துக் கொண்டவர் ஆசீர்வதிக்கப்பட்டவரே.
15. உம்முடைய திருவயிற்றின் கனியாகிய இயேசு உமக்கு சன்மானம் அளித்தவர் ஆசீர்வதிக்கப்பட்டவரே.

## சிந்தனை

உலகின் இறுதி யுகத்தில் வர இருக்கும் புனிதர்களை உருவாக்குவது மாதாவுக்கென்று ஒதுக்கி வைக்கப்பட்டுள்ளது. (புனித லூயிஸ் கிரிஞ்ஞன்)

## செபம்

ஆண்டவரே, திருச்செபமாலை வழியாக உம்மையும், உம்முடைய மாதாவையும் வாழ்த்தும் வரம் தாரும்.